DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 243/2019

Deposition of witness for P.W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : புஷ்பா | Caste | : |
| Husband's Name | : வெங்கட்ராமன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 25-05-2022

முதல் விசாரணை

நான் திண்டலில் உள்ள KAS நகர் விக்ரம் ஆர்ச்சில் குடியிருந்துவருகிறேன். ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். 21.07.2018 ம் தேதி காலை சுமார் 5.15 மணிக்கு திண்டலில் இருந்து ஈரோட்டிற்கு TVS Just வாகனத்தின் மூலம் நானும் எனது கணவரும் சென்றுகொண்டிருந்தோம். பரிமளம் மஹாலுக்கு முன்பு நாங்கள் சென்றுகொண்டிருக்கும்போது பின்னால் இருசக்கரவாகனத்தில் வந்த நபர் 5 பவுன் தாலியை அறுத்து சென்றுவிட்டார். அறுத்த நபரை பார்த்தால் தற்போது என்னால் கூற முடியாது. அந்த நபர் வந்த வண்டி எண்ணும் எனக்கு தெரியாது. அந்த நகையில் மதிப்பு 80,000 இருக்கும். தாலியை அறுத்துவிட்டதால் வீட்டிற்கு சென்றுவிட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் அசாஆ 1 ஆகும். 11.11.2018 ல் என்னுடைய நகையை கண்டுபிடித்துவிட்டதாகவும் அடையாளம் காட்டுமாறு கூறினார்கள். நான் சென்று அடையாளம் காட்டினேன். அந்த நகையை நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல் செய்து இடைக்காலமாக பெற்றேன். அந்த நகையை பெறும்பொழுது நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த புகைப்படம் சாபொ1 (சாட்சி நகையையும் நீதிமன்றத்திற்கு எடுத்துவந்திருந்தார். அதுவும் ஒப்பீடு செய்யப்பட்டது) போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

என்னுடைய புகாரிலும் போலீசார் விசாரணையில் எனது நகையின் அடையாளத்தையும் அந்த நபர் பயன்படுத்தியதாக கூறும் வாகனத்தின் அடையாளத்தையம் கூறவில்லை என்றால் ஆமாம். அந்த நகையை பறித்த நபரின் அங்க அடையாளங்களையும் கூறவில்லை என்றால் ஆமாம். நகை என்னுடையது என்பதை காண்பிக்ககூடிய ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றால் ஆமாம். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 11.11.2018 ல் எனது நகையை காவல் நிலையத்தில் அடையாளம் காண்பித்ததாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 243/2019

Deposition of witness for P.W. 2

| | | | |
|---|---|---|---|
| Name | : வெங்கட்ராமன் | Caste | : |
| Father's Name: | : அப்பாசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 25-05-2022

முதல் விசாரணை

நான் திண்டலில் உள்ள KAS நகர் விக்ரம் ஆர்ச்சில் குடியிருந்துவருகிறேன். வங்கியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அசா 1 எனது மனைவி. 21.07.2018 ம் தேதி காலை சுமார் 5.15 மணிக்கு வீட்டிலிருந்து பேருந்து நிறுத்தத்திற்கு TVS Just வாகனத்தின் மூலம் நானும் எனது மனைவியும் சென்றுகொண்டிருந்தோம். பரிமளம் மஹாலுக்கு முன்பு நாங்கள் சென்றுகொண்டிருக்கும்போது பின்னால் இருசக்கரவாகனத்தில் வந்த நபர் எனது மனைவியின் 5 பவுன் நகையை அறுத்து சென்றுவிட்டார். ஒருநிமிடத்திலேயே அவ்வாறு நடந்துவிட்டது. என்ன வாகனம் என்று எனக்கு தெரியாது. அந்த நபரை எனக்கு தெரியாது. அந்த நபருக்கு 30 வயது இருக்கும். நகையை அறுத்த நபர் அப்படியே சென்றுவிட்டார். தாலியை அறுத்துவிட்டதால் வீட்டிற்கு சென்று தாலியை கயிறின் மூலம் மீண்டும் கட்டிவிட்டு காவல் நிலையத்தில் எனது மனைவி புகார் கொடுத்தார். 11.11.2018 ம் தேதி நகையை அடையாளம் காண்பிக்குமாறு கூறினார்கள். நானும் எனது மனைவியும் சென்று நகையை அடையாளம் காட்டினோம். அந்த நகையை நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல் செய்து இடைக்காலமாக பெற்றுக்கொண்டார். அந்த நகையை பெறும்பொழுது எனது மனைவி புகைப்படத்தை சமர்ப்பித்தார். அது ஏற்கனவே சாபொ1 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

கடந்த 21.7.2018 ம் தேதி காலை சுமார் 5.15 மணிக்கு நானும் எனது மனைவியும் பரிமளம் மஹால் முன்பு சென்றதாகவும் என்னுடைய மனைவியின் நகையை ஒரு நபர் அறுத்துசென்றுவிட்டதாகவும் நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனது மனைவி புகார் கொடுத்தாகவும் எனது மனைவியின் நகையை 11.11.2018 ல் காவல் நிலையத்தில் அடையாளம் காண்பித்ததாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 243/2019

Deposition of witness for P.W. 3

| | | | |
|---|---|---|---|
| Name | : கௌரிசங்கர் | Caste | : |
| Father's Name | : ராஜீ | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 25-05-2022

முதல் விசாரணை

நான் வேல்நகரில் குடியிருந்துவருகிறேன். இ-சேவை மையம் வைத்து நடத்திவருகிறேன். அசா 1 மற்றும் அசா 2 ஆகியோர் எனது குடும்ப நண்பர்கள். 21.07.2018 ம் தேதி காலை சுமார் 5.15 மணிக்கு வண்டியில் சென்றுகொண்டிருக்கும்போது நகையை பறித்துவிட்டதாக அசா 2 வெங்கட்ராமன் எனக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார். அவர்கள் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்ததாகவும் அவர்களுக்கு பின்புறம் வந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர் நகையை அறுத்துவிட்டதாக தெரிவித்தனர். இதுசம்மந்தமாக அசா 1 புகார் அளித்தார். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

கடந்த 21.7.2018 ம் தேதி காலை சுமார் 5.15 மணிக்கு அசா 2 எனக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நகையை ஒரு நபர் அறுத்துசென்றுவிட்டதாக எனக்கு தொலைபேசி மூலம் தெரிவித்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 243/2019

Deposition of witness for P.W. 4

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகேசன் | Caste | : |
| Father's Name : | : சின்னதம்பி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 25-05-2022

முதல் விசாரணை

நான் சத்திநகரில் குடியிருந்துவருகிறேன். நான் ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அசா 1 மற்றும் அசா 2 ஆகியோரை எனக்கு தெரியும். 21.07.2018 ம் தேதி காலை சுமார் 5.15 மணிக்கு வண்டியில் சென்று கொண்டிருக்கும் போது நகையை பறித்துவிட்டதாக அசா 2 வெங்கட்ராமன் எனக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார். அவர்கள் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்ததாகவும் அவர்களுக்கு பின்புறம் வந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர் நகையை அறுத்துவிட்டதாக தெரிவித்தனர். அந்த இடத்தில் சென்று பார்த்தேன். இதுசம்மந்தமாக அசா 1 புகார் அளித்தார். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

கடந்த 21.7.2018 ம் தேதி காலை சுமார் 5.15 மணிக்கு அசா 2 எனக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நகையை ஒரு நபர் அறுத்துசென்றுவிட்டதாக எனக்கு தொலைபேசி மூலம் தெரிவித்ததாகவும் நான் சம்பவ இடம் சென்று பார்த்ததாகவும் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.